ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்

**திகதி** 2019 மாச்சு 15

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்(கொ.மு.சு) – 2019 பெப்புருவரி

**தயாரிப்பு நடவடிக்கைகள் 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2019 பெப்புருவரியில் மெதுவான வீதத்தில் அதிகரித்தமைக்கு** குறிப்பாக புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் தொடர்பான தயாரிப்பு நடவடிக்கைகளில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்வீழ்ச்சிக்கு பெப்புருவரியில் வேலைநாட்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையே முக்கிய காரணமாகும். புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்துசெல்லும் விதத்தில் இம்மாதகாலத்தில் கொள்வனவுகளின் இருப்பும் குறைவடைந்தது.

**கொ.மு.சு**

சுட்டெண் பெறுமதி


**50.6**

சனவரி 2019 உடன் ஒப்பிடுகையில் 3.8 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

| மாறி | 2019 சன. | 2019 பெப். | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.4** | **50.6** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 54.0 | 48.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| உற்பத்தி | 55.5 | 48.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 52.5 | 53.0 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 55.5 | 54.0 | - | அதிகரிப்பு,மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 55.0 | 53.5 | - | விரிவு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

எவ்வாறாயினும், இனிவரும் பருவகால கேள்விகளுக்காக வியாபார நடவடிக்கைகளை உயர்த்தும் பொருட்டு புதிய ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் காரணமாக தொழில்நிலையில் சிறிய முன்னேற்றமொன்று காணப்பட்டது. அதேவேளை, நிரம்பலர் வழங்கல் நேரம் சிறிதளவு வீதத்தினால் நீடிக்கப்பட்டது. பெப்புருவரியின் தொடக்கத்தில் பொருட்களின் வழங்கல் ஏற்பாடுகளும் சீன புத்தாண்டு பண்டிகை விடுமுறை காரணமாக ஏற்பட்ட வழங்கல் இடையூறுகளும் நிரம்பலர் வழங்கல் நேரத்தை நீடித்திருக்கின்றன. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகள் நீங்கலான அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான 50.0 இற்கு மேலான பெறுமதியைப் பதிவுசெய்தன.

***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு.கொ.மு.சு***

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 பெப்புருவரியில் 50.6 பெறுமதியினை பதிவு செய்து 2019 சனவரியிலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகள் குறைவடைந்து காணப்பட்டது.

யூரோ வலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 பெப்புருவரியில் மெதுவடைந்த வேளையில் சீனா மற்றும் இந்தியா என்பனவற்றில் தயாரிப்பு கொ.மு.சு அதிகரித்திருந்தது.

*(மூலம்: மார்க்கிட்,2019 மாச்சு 14 இல் உள்ளபடியான)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**2019 பெப்புருவரியில் பணிகள் துறை மெதுவான வேகத்திலேனும் விரிவடைந்தமைக்கு,** புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகள் என்பன 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் மெதுவாக விரிவடைந்தமை பக்கபலமாக அமைந்தது. இம்மெதுவான போக்கு, தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக பணிகள் துறையின் விரிவாக்கத்தில் காணப்பட்ட தொடர்ச்சியான விரைந்த போக்கிற்குப் பின்னர் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

வியாபார நடவடிக்கைகளில் காணப்பட்ட விரிவாக்கம் முக்கியமாக நிதியியல் துறைகள் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகள் முழுவதிலும் முக்கியமாகக் காணப்பட்டமைக்கு ஏற்றுமதி அளவுகளில் தொழில்நுட்ப அடிப்படையிலான முன்னேற்றங்களும் விரிவாக்கங்களும் ஏற்பட்டமையே காரணமாகும். நடவடிக்கைகளுக்கான புதிய வியாபாரங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் இரண்டும் மெதுவடைந்தமைக்கு வியாபார சூழலில் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டமையினால் பெரும்பாலான மக்கள் காத்திருந்து பார்க்கும் அணுகுமுறையினை பின்பற்றியமையே காரணமாகும். மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை துணைத் துறைகளின் எதிர்பார்ப்புக்கள் குறைவடைந்தமைக்கு 2019 வரவுசெலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஊர்தி தீர்வைச் சீர்திருத்தங்களே காரணமாகும். வியாபார செயன்முறைகளை தன்னியக்கப்படுத்துவதிலும் கணனிவழி மூலமான செயற்பாடுகளின் மூலம் தொழில்நிலைகளை மேற்கொள்வதன் மீது கவனம் செலுத்தப்பட்டு வருவதனால் தொழில்நிலை வளர்ச்சி வீழ்ச்சியடையக்கூடும் என்பதனை சில பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

| மாறி | 2019 சன | 2019 பெப். | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **55.8** | **53.0** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | |
| புதிய வியாபாரங்கள் | 57.7 | 55.3 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 56.7 | 54.7 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 57.4 | 51.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 42.9 | 43.3 | + | வீழ்ச்சி, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 64.4 | 60.5 | - | சாதகம், மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2019 பெப்புருவரியில் பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் மெதுவான வீதத்தில் அதிகரித்த வேளையில் பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவும் மெதுவான வேகமொன்றில் அதிகரித்தது.


# கொ.மு.சு

சுட்டெண் பெறுமதி

**53.0**

**2019 சனவரி உடன் ஒப்பிடுகையில் 2.8 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்**




***உலக தோற்றப்பாடு: பணிகள்கொ.மு.சு***

உலக பணிகள் கொ.மு.சு 2019 சனவரியின் 52.6 வீதம் கொண்ட 28 மாதக் குறைப்பிலிருந்து 2019 பெப்புருவரியில 53.3 இற்கு அதிகரித்து உலகளாவிய பணிகள் துறையின் வெளியீட்டின் விரிவாக்கத்தின் வீதம் உயர்வடைந்தமையினை எடுத்துக்காட்டியது. இது தொடர்ச்சியான 115 மாதங்களுக்குமான உலகப் பணிகள் துறையின் வெளியீட்டில் வளர்ச்சியை இப்போது சமிஞ்சைப்படுத்தியது.

ஜப்பான், சீனா, ஐக்கிய இராச்சியம், இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2019 பெப்புருவரியில் அவர்களுடைய பணிகள் துறையானது மேம்பாடு அடைந்தமையினை சுட்டிக்காட்டுன்றன.

*(மூலம்: மார்க்கிட், 2019 மார்ச 14 இல் உள்ளபடியான)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு $= 50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $> 50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $< 50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள்நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.